## புதுக்கோட்டை மங்களாக்கோவிலில் 41 அணிகள் மோதும் மாபெரும் கபடி போட்டி: தமிழ்நாட்டு விளையாட்டான

# கபடி போட்டியில் சாதிக்கும் வீரர்களுக்கு ‘திராவிட மாடல்’ அரசு என்றும் துணை நிற்கும்!

## மாநில அளவிலான கபடி போட்டியைத் தொடங்கி வைத்து – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**புதுக்கோட்டை, மே.25-**

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் - கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றியக் கழகம் சார்பில் மங்களாக்கோவிலில், கழகத்தலைவர் -முதலமைச்சர் அவர்களின் 72-வது பிறந்த நாளை முன்னிட்டு, மாநில அளவிலான கபடி போட்டியை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

**அப்போது அவர், “நம் திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, தமிழ்நாட்டில், விளையாட்டு மாபெரும் மக்கள் இயக்கமாக மாறி இருக்கிறது என்பதற்கு சான்றாக, இந்த கபடி போட்டி சான்றாக அமைகின்றது. நம் மண்ணின் விளையாட்டான கபடி போட்டியில் சாதிக்கும் வீரர்களுக்கு என்றும் துணை நிற்போம்” எனக் குறிப்பிட்டார்.**

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

இந்த கபடி போட்டியை, இன்று துவங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக, ஏற்பாடு செய்துள்ள ஒன்றிய செயலாளர் அண்ணன் பரமசிவம் அவர்களுக்கு, இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இங்கு இருக்கின்ற இந்த ஏற்பாட்டை எல்லாம் பார்க்கும் பொழுது, இது ஏதோ ஒரு கிராமத்தில் நடக்கின்ற சிறிய நிகழ்ச்சி போல இல்லை. ஏதோ ஒரு சர்வ தேச அளவிலான போட்டிகள் நடப்பது போன்று ஒருங்கிணைத்துள்ளார்.

தமிழ்நாடு முழுக்க இருந்து, ஆண்கள் மற்றும் மகளிர் என்று, 41 கபடி அணிகள் இந்தப் போட்டியில் பங்கு பெற இருக்கிறீர்கள். இந்தப் போட்டியை பார்த்து, கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராக மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் விளையாட்டு துறை அமைச்சராகவும், நான் மிகவும் பெருமைப்படுகிறேன். உங்களுக்கு எனது வாழ்த்துக்களை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜல்லிக்கட்டுப் போட்டி!**

பொதுவாக, புதுக்கோட்டை என்றாலே ஏதாவது ஒரு விளையாட்டுப் போட்டி வருடம் முழுவதும் நடந்துகொண்டே இருக்கும். தமிழ்நாட்டிலேயே அதிகமான ஜல்லிக்கட்டுப் போட்டி , எங்கு நடக்கிறது என்று பார்த்தீர்கள் என்றால், அது இந்தப் புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும்தான். இங்கு பக்கத்தில் இருக்கின்ற தச்சங்குறிச்சி, ஜல்லிக்கட்டுக்கு உலக அளவில் பிரபலமான ஊர். ஜல்லிக்கட்டு போட்டியை நடத்த, இனி எந்த தடையும் இல்லை என்று 2023-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அப்போது நம் முதலமைச்சர் அவர்களுக்கு நீங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு பாராட்டு விழா நடத்தினீர்கள். அந்த நிகழ்ச்சியிலும் நான் தான் வந்து கலந்து கொண்டேன்.

ஜல்லிக்கட்டுக்கு அடுத்து, இப்போது இந்த கபடி போட்டியையும், அதிக அளவில் நடத்துகின்ற மாவட்டமாக இன்றைக்கு புதுக்கோட்டை உருவாகி கொண்டு வருகிறது. அதற்கும் எனது வாழ்த்துக்கள்.

விளையாட்டுத் துறையைப் பொறுத்த வரை இன்றைக்கு தமிழ்நாடு, இந்தியாவிலேயே நம்பர் ஒன் இடத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

அதற்கு புதுக்கோட்டை மாவட்டத்தின் பங்களிப்பு, மிக மிக முக்கியம். புதுக்கோட்டையில் இருந்து பல்வேறு விளையாட்டு வீரர்கள் தினம் தோறும் உருவாகிக் கொண்டு வருகிறீர்கள். ஏராளமான தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளை நாம் தமிழ்நாட்டில் நடத்திக் கொண்டிருக்கிறோம்.



**திராவிட மாடல் அரசு!**

தமிழ்நாட்டில் இருந்து வெளியூர் மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்று விளையாடும் வீரர்களுக்குத் தேவையான அனைத்து உபகரணங்கள், நிதி உதவி, பயணச் செலவு, தங்கும் வசதி இப்படி அனைத்தையும் நம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு பார்த்து பார்த்து செய்து கொண்டிருக்கிறது.

அதிலும் குறிப்பாக, வெற்றி பெற்று திரும்புகின்ற விளையாட்டு வீரர்களுக்கு, உடனடியாக முதலமைச்சர் அவர்களை அழைத்து, அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையையும் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார். அது மட்டுமல்ல, முன்பெல்லாம் நிறைய பெற்றோர்கள் தன் பிள்ளைகள் விளையாட்டு துறையை நோக்கி செல்லும் பொழுது அவர்களுக்கு ஒரு சின்ன அச்சம் வரும். ஏனென்றால், அவர்கள் விளையாட்டுத் துறைக்குச் செல்லும்போது அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காது என்ற எண்ணம் இருந்தது. ஆனால், விளையாட்டு துறையும் மற்ற துறைகள் மாதிரி தான். விளையாட்டுத்துறையைத் தேர்ந்தெடுத்தாலும், வாழ்க்கையில் நிச்சயம் நாம் ஜெயித்துக் காட்டலாம்.

அதற்காகத்தான் நம் முதலமைச்சர் அவர்களின் தலைமையில், சீரிய முயற்சியால் மூன்று சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், சென்ற வருடம் மட்டும் 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்களில் வேலை வாய்ப்பை, நம் முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்தார். சென்ற ஆண்டு 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை கொடுத்து இருக்கிறோம்.

**முதலமைச்சர் கோப்பை!**

இந்த முறை குறைந்தது 25 மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட நூறு விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலையை வாங்கித் தருவோம் என்று, முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார். அதுமட்டுமல்ல, ஒவ்வொரு ஆண்டும், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியையும் பல கோடி ரூபாய் செலவில் நடத்துகிறோம். ஒவ்வொரு வருடமும் 35 கோடி ரூபாய் அளவிற்கு பரிசு தொகையை மட்டும் முதலமைச்சர் அவர்கள் அளிக்கிறார். முக்கியமாக, கிராமப்புறங்களில் இருந்து நிறைய விளையாட்டு வீரர்கள் வரவேண்டும் என்பதில், நம் திராவிட மாடல் அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் மிகவும் உறுதியாக இருக்கிறார்கள்.

அதனால்தான் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற அனைத்து கிராம பஞ்சாயத்துகளுக்கும் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, கலைஞர் விளையாட்டு உபகரணங்களைக் கொடுத்தோம். இந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும், 497 கிராம ஊராட்சிகளுக்கும் `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’டை 6 மாதங்களில், கொடுத்து முடித்திருக்கிறோம். அதை நம் விளையாட்டு வீரர்கள் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டு வருகிறீர்கள். எனவே விளையாட்டிற்கும், விளையாட்டு வீரர்களுக்கும் நம் அரசும், நம் முதலமைச்சரும் என்றென்றும் துணை நிற்பார்கள்.

நம் மண்ணின் விளையாட்டான இந்த கபடி போட்டியை விளையாட வந்துள்ள அத்தனை பேருக்கும் மீண்டும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறேன். தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு, அண்ணன் மங்களாக்கோவில் பரமசிவம் நடத்தி இருக்கின்ற போட்டியைப் பார்த்து, இதே மாதிரியான போட்டிகளை தமிழ்நாடு முழுக்க நம் கழகத்தினர் இனி நடத்துவார்கள் என்றும், தமிழ்நாட்டிற்கு எடுத்துக்காட்டாக இந்தப் போட்டிகள் நடைபெறும் என்றும் நான் எதிர் பார்க்கிறேன்.

**பெண்களுக்கான அரசு!**

இந்த நேரத்தில் ஒரு சிறிய வேண்டுகோள். வரும்பொழுது இந்தப் போட்டிக்கான நோட்டீஸ்களை பார்த்தேன். அதில் பரிசுத் தொகைகள் போடப்பட்டு இருந்தன. ஆண்கள் அணிக்கு முதல் பரிசாக ஒன்றரை லட்சம் அறிவித்து இருக்கிறீர்கள். பெண்கள் அணிக்கு முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபாய் அறிவித்து இருக்கிறீர்கள். அதேபோல் இரண்டாவது மூன்றாவது, நான்காவது பரிசுகளும் அப்படித்தான். ஆண்களுக்கு பெண்களை விட அதிகமான பரிசுத் தொகையை அறிவித்து இருக்கிறீர்கள்.

நடந்து கொண்டிருப்பது நமது தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசு. பெண்களுக்கான அரசு. நம் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் போட்ட முதல் கையெழுத்து பெண்களுக்கான விடியல் பயணம் திட்டம். இப்படி பெண்களுக்குப் பார்த்துப் பார்த்து ஒவ்வொரு திட்டத்தையும், நம் தலைவர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்.

பெண்கள் உயர் கல்வி படிக்க வேண்டும் என்று புதுமைப்பெண் திட்டம் வாயிலாக மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத் தொகை, இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் நம் தலைவர் அவர்கள், நமது அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த திராவிட மாடல் அரசில் ஆண்களும் பெண்களும் சரி நிகர் சமம்.

அண்ணன் பரமசிவம் அவர்கள் பேசும் பொழுது சொன்னார். விளையாட்டு விழா தொடக்க விழாவிற்குக் கூப்பிட்டு நிறைய கோரிக்கை வைக்கிறேன் என்று சொன்னார். நிச்சயமாக நான் இந்தக் கோரிக்கையை உங்களுக்கு வைக்கிறேன். அடுத்த முறை பரிசுகளை, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரிசமமாக வழங்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்த கபடி போட்டியில் பங்கு பெற்றுள்ள அத்தனை பேருக்கும், மீண்டும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்!**

அமைச்சர்கள் கே.என்.நேரு, ரகுபதி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மெய்யநாதன், மாவட்டச் செயலாளர் செல்லபாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா, மாவட்டப் பொறுப்பாளர், பழனிவேல், மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர் இளையராஜா, பெரியண்ணன் அரசு, கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் பரமசிவம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சண்முகம், கபடி போட்டி நிர்வாகிகள், பயிற்சியாளர்கள், நடுவர்கள் விளையாட்டுவீரர்கள் மற்றும் கழக முன்னணியினர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/1312/2025

**இரண்டு உறை குறுகிய கால மறு மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, மண்டலம் - 6, 8, 10 & 13 மண்டலத்தில் உள்ள 68 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் தார் சாலைகள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், மற்றும் இன்டர்லாக் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணி சிப்பம் - 17, 18 & 30 (SPECIAL FUND 2025 - 26)**

பணியின் உத்தேச தொகை : **குறைந்தபட்சம் ரூ.221.00லட்சம் அதிகபட்சம் ரூ.233.00 லட்சம்**

முன்வைப்பு தொகை : மொத்த பணியின் உத்தேச தொகையில் **1%**

**ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : 06.06.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

**ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்: 06.06.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2551 / ஒப்பந்தப்புள்ளி / 2025

**கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**





**தி.மு.க.**
**இளைஞர் அணி**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

**ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!**

நாகப்பட்டினம், மயிலாடுதுறை, தஞ்சாவூர் தெற்கு, தஞ்சாவூர் மத்திய, கோவை வடக்கு, கோவை மாநகர் மற்றும் கோவை தெற்கு மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 26.05.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | நாகப்பட்டினம் | தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம். |
| | மாலை 4.00 மணி | மயிலாடுதுறை | விஜய் மஹால், தரங்கம்பாடி சாலை, மயிலாடுதுறை. |
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |
| | காலை 10.00 மணி | கோவை வடக்கு | தாரஹா மஹால், பெரியநாயக்கன்பாளையம். |
| | மதியம் 12.00 மணி | கோவை மாநகர் | கிஸ்கால் கிராண்ட் ஹோட்டல், வடகோவை. |
| | மாலை 5.30 மணி | கோவை தெற்கு | ஸ்ரீ தங்கவேல் அய்யன் கே.வி.கே.திருமண மண்டபம், கோவில்பாளையம் சாலை, பெரிய நெகமம். |
| 28.05.2025 புதன்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் மத்திய | அறிஞர் அண்ணா மஹால், கீழவாசல், தஞ்சாவூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 22-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி





**தி.மு.க.**
**இளைஞர் அணி**

கலைஞர் 100 1924 - 2023

**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான**
**திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு**

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மாவட்டங்களுக்கு 3 நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**25/05/2025 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 09:30 மணி | கழக இளைஞர் அணி மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | கோர்ட் யார்டு ஹோட்டல், திருச்சி. |
| மதியம் 12:30 மணி | ஆர்.சிவராம் பிரசாத் - ஏ.காவ்யா இணையரின் திருமண வரவேற்பு விழா | ஸ்ரீ காமாட்சி மஹால், வேலாயுதம்பாளையம், கரூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-05-2025

